"THE NEW INDIAN EXPRESS"

PAGE NO: 03

DATE: 23.04.21

# Pondy Univ shut over spike in cases

**EXPRESS NEWS SERVICE**
@ Puducherry

OWING to the sudden surge in Covid-19 cases among faculty, students, officers, staff, and its other stakeholders, Pondicherry University has announced of closing down its campus for five days. The university would remain shut from April 23 (Friday) to April 27 (Tuesday) as a measure to control the spread of the virus within the campus, according to a circular issued by the Registrar of the university. The restrictions will not be applicable to the essential services of the university, read the circular. The university has asked all PhD scholars and inmates who are presently residing in the hostels (both boys and girls) to vacate at the earliest; not later than April 25. The date of reopening of hostels will be announced later on the university website, said the registrar.

**Vacate before April 25**

The university has asked all PhD scholars and inmates who are presently residing in the hostels (both boys and girls) to vacate at the earliest; not later than April 25.

The inmates have been requested to return directly to their respective hometowns and take all their valuable belongings including laptops, original certificates which they may need during the period. The mess will remain closed from April 26. Non-resident PhD scholars and PG students are not permitted to enter the campus until further orders.

"HINDU TAMIL"

PAGE NO: 05

DATE: 23.04.21

# கரோனா பரவலால் புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் மூடல்

- விடுதிகளும் மூடப்படுகிறது

**புதுச்சேரி**

கரோனா அதிகரிப்பால் புதுச்சேரி மத் திய பல்கலைக்கழகம் இன்று முதல் வரும் 27-ம் தேதி வரை மூடப்படுகிறது. அதேபோல் விடுதிகளையும் வரும் 25-ம் தேதிக்குள் காலி செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

புதுச்சேரி பல்கலைக்கழக பதிவாளர் (பொறுப்பு) சேகர் நேற்று விடுத்துள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

எதிர்பாராத வகையில் கரோனா தொற்று பல்கலைக்கழக பேராசிரியர்கள், அதிகாரிகள், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் இடையே அதிகரித்துள்ளது. அதனால் இன்று (ஏப். 23) முதல் வரும் 27-ம் தேதி வரை பல்கலைக்கழக வளாகம் மூடப்படுகிறது. அதே நேரத்தில் பல்கலைக்கழகத்தில் அத்தியாவசிய பணிகளுக்கு இந்த மூடல் பொருந்தாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விடுதிகள் மூடல்

அதேபோல் மற்றொரு உத்தரவில், "கரோனா பரவலால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விடுதிகளில் தங்கியுள்ள பிஎச்டி ஆராய்ச்சியாளர்கள், மாணவ, மாணவிகள் வரும் 25-ம் தேதிக்குள் காலி செய்ய வேண்டும். விடுதிகள் திறக்கும் தேதி பல்கலைக்கழக இணையத்தில் வெளியிடப்படும்.

விடுதிகளில் இருந்து புறப்படும்போது தங்கள் அறையில் வைத்துள்ள விலை மதிப்புள்ள சாதனங்கள், லேப்டாப், மொபைல், கல்வி சான்றுகள் ஆகியவற்றை பத்திரமாக கையோடு எடுத்து செல்வது அவசியம்.

விடுதிகளில் இருந்து மாணவர்களின் பெற்றோருக்கும், உள்ளூர் பாதுகாவலருக்கும் தகவல் தெரிவிக்கப்படும். அத்துடன் உணவு விடுதி வரும் 26-ம் தேதி முதல் மூடப்படும். அதேபோல் விடுதியில் தங்காத இதர பிஎச்டி ஆராய்ச்சியாளர்கள், பட்டமேற்படிப்பு மாணவர்கள் ஆகியோரும் பல்கலைக்கழக வளாகத்துக்குள் வர அனுமதி இல்லை" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"THE HINDU"

PAGE NO: 2

DATE: 23.04.21

# Pondicherry University to be closed from April 23

## Circular asks Ph.D scholars, inmates to vacate hostels

SPECIAL CORRESPONDENT
PUDUCHERRY

Pondicherry University announced on Thursday that it was shutting down from April 23 to 27 due to the sudden increase in COVID-19 cases among faculty, staff and students.

A press note said the closure was a measure to contain the spread of the pandemic on the campus.

Meanwhile, a circular directed all Ph.D scholars/inmates who are currently in hostels (boys and girls) to vacate the rooms at the earliest, not later than April 25.

Reopening of the hostel facility would be announced on the University web site later.

The inmates have also been asked to take all their belongings, including laptops, mobiles, and original certificates.

They should also directly return to their respective home towns.

The hostel office would inform their parents/local guardians too.

The mess is also shutting down on April 26 until further notice.

The University has also prohibited non-Ph.D scholars and PG students from entering the campus until further orders.

"DINATHANTHI"

PAGE NO: 12

DATE: 23.04.2021



# புதுச்சேரி பல்கலைக்கழகம் மூடல்

## சொந்த ஊர்களுக்கு மாணவர்கள் புறப்பட்டனர்

புதுச்சேரி, ஏப்.23-
நாளுக்குநாள் கொரோனா பாதிப்பு அதிகரித்து வரும் நிலையில் புதுவை பல்கலைக்கழக வளாகத்திலும் பலர் தொற்றுக்குள்ளானார்கள்.

இதைத்தொடர்ந்து பல்கலைக்கழகம் மூடப்படுவதாக நிர்வாகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பல்கலைக்கழக பதிவாளர் (பொறுப்பு) விடுத்துள்ள சுற்றறிக்கையில், கொரோனா தொற்றினால் பாதிக்கப்படும் மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்களின் எண்ணிக்கை திடீரென உயர்ந்துள்ளது. எனவே புதுவை பல்கலைக்கழகம் இன்று (வெள்ளிக்கிழமை) முதல் வருகிற 27-ந்தேதி வரை மூடப்படுகிறது. பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளதால் வெளிமாநில மாணவ, மாணவிகள் தங்களது பெட்டி, படுக்கைகளுடன் சொந்த ஊர்களுக்கு புறப்பட்டனர். இதனால் புதுவை பஸ்நிலையத்தில் மாணவர்கள் கூட்டத்தை காணமுடிந்தது.

"DINAMALAR"

DATE: 23.04.2021

PAGE NO: 9

# புதுச்சேரி பல்கலைக்கழகம் 27ம் தேதி வரை மூடல்

**புதுச்சேரி, ஏப். 23–**
புதுச்சேரி பல்கலைக் கழகம் வரும் 27 ம் தேதி வரை மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி பல்கலைக் கழகப் பதிவாளர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், கொரோனா தொற்று பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், அதிகாரிகள், பணியாளர்கள் மற்றும் மாணவர்களிடையே அதிகரித்துள்ளது.

அதனால் இன்று 23ம் தேதி முதல் வரும் 27ம் தேதி வரை பல்கலைக்கழக வளாகம் மூடப்படுகிறது.

அதே நேரம் பல்கலைக் கழகத்தில் அத்தியாவசியப் பணிகளுக்கு இந்த மூடல் பொருந்தாது என கூறப்பட்டுள்ளது.

"DINAKARAN"

PAGE NO: 07 DATE: 23.04.21

# புதுவை பல்கலைக்கழகம் 5 நாட்கள் மூடல்

**புதுச்சேரி, ஏப். 23:** கொரோனா தொற்று அதிகரிப்பால் புதுவை பல்கலைக்கழகம் இன்று (23ம் தேதி) முதல் வரும் 27ம் தேதி வரை மூடப்படுகிறது.

இது தொடர்பாக பல்கலைக்கழக பதிவாளர் சேகர் அனைத்து துறைகளுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:

மத்திய பல்கலைக்கழக ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள் மற்றும் தொடர்புடைய நபர்களிடம் கொரோனா தொற்று அதிகரித்து வருவதால் கொரோனா பரவலை கட்டுப்படுத்தும் விதமாக இன்று (23ம் தேதி) முதல் 27ம் தேதி வரை பல்கலைக்கழகம் மூடப்படும். அதே நேரத்தில் பல்கலைக்கழகத்தின் அத்தியாவசிய பணிகளுக்கு இந்த மூடல் பொருந்தாது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

"DINAMANI"

PAGE NO: 04 DATE: 23.04.21

# புதுச்சேரி மத்திய பல்கலை. இன்று முதல் 5 நாள்கள் மூடல்

**புதுச்சேரி, ஏப்.22:** கரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் விதமாக, புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் வெள்ளிக்கிழமை (ஏப்.23) முதல் 5 நாள்களுக்கு மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இதுகுறித்து புதுச்சேரி மத்திய பல்கலைக்கழக நிர்வாகம், பல்கலைக்கழக அனைத்துத் துறைகளுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கையின் விவரம்:

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழக ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள் மற்றும் தொடர்புடைய நபர்களிடம் கரோனா தொற்று பரவல் அதிகரித்து வருவதால், இந்த நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்தும் விதமாக, பல்கலைக்கழகம் வெள்ளிக்கிழமை (ஏப்.23) முதல் செவ்வாய்க்கிழமை (ஏப்.27) வரை மூடப்படுகிறது. இது பல்கலைக்கழக அத்தியாவசியப் பணிகளுக்கு பொருந்தாது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விடுதிகளும் மூடல்:** இதனிடையே, புதுச்சேரி மத்திய பல்கலைக்கழக விடுதிகளும் மூடப்படவுள்ளன.

இதுகுறித்து புதுச்சேரி மத்திய பல்கலைக்கழக நிர்வாகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கரோனா பரவலால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விடுதிகளில் தங்கியுள்ள பி.எச்டி. ஆராய்ச்சியாளர்கள், மாணவ, மாணவிகள் வருகிற 25-ஆம் தேதிக்குள் விடுதிகளை காலி செய்ய வேண்டும். விடுதிகள் திறக்கும் தேதி பின்னர் பல்கலைக்கழக இணையதளத்தில் வெளியிடப்படும். அத்துடன் உணவு விடுதி வருகிற 26-ஆம் தேதி முதல் மூடப்படும்.

விடுதிகளில் இருந்து புறப்படும் போது, மாணவ, மாணவிகள் தங்களது அறையில் வைத்துள்ள விலை மதிப்புள்ள சாதனங்கள், மடிக்கணினி, செல்லிடப்பேசி, கல்விச் சான்றுகள் ஆகியவற்றை பாதுகாப்பாக உடன் எடுத்துச் செல்வது அவசியம்.

இதேபோல, விடுதிகளில் தங்காத இதர பி.எச்டி. ஆராய்ச்சியாளர்கள், பட்டமேற்படிப்பு மாணவர்கள் ஆகியோரும் பல்கலைக்கழக வளாகத்துக்குள் வர அனுமதி இல்லை என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.